செ.வெ.எண்:131 நாள்:28.02.2018

# திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி தூய்மைப்படுத்துதல் பணிகளில் ஈடுபட விரும்பும், பொதுமக்கள் Namma NELLAI மொபைல் ஆப் டவுன்லோடு செய்து SBM கிளிக் செய்து Volunteer For A Cause கிளிக் செய்து பதிவு செய்து கொள்ள வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தாமிரபரணி தூய்மைப்படுத்துதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று (28.02.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்று பகுதிகளை சுத்தப்படுத்தி, தூய்மைபடுத்தும் பணிகள் ஏற்கனவே இரண்டு கட்டங்களாக கல்லூரி மாணவ, மாணவிகள், தொண்டு நிறுவனங்கள், அரசு ஊழியர் சங்கங்கங்களின் பிரதிநிதிகள், தன்னார்வளர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் பங்களிப்புடன் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரும் மார்ச் திங்கள் 9 மற்றும் 10 ஆகிய நாட்களில் அடுத்த கட்ட தூய்மை பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மார்ச் 9ம் தேதி ஆற்று கரைப்பகுதியில் உள்ள சீமைகருவேல் மற்றும் புதர்கள், ஆக்கிரமிப்புகள் இயந்திரங்கள் மூலம் அகற்றும் பணிகளும், மார்ச் 10ம் தேதி கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பல்வேறு அமைப்புகள், தன்னார்வளர்கள் மூலம் தூய்மைப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி 60 பகுதிகளாக பிரிக்கப்பட்டு தூய்மை பணிகளை மேற்கொள்ளப்படவுள்ளது. இப்பணிகளில் 23 கலைகல்லூரிகள், 19 பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்வேறு தொண்டு அமைப்புகள் ஈடுபடவுள்ளனர். கல்லூரி மாணவ, மாணவிகள் அந்தந்த பகுதி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களையும் தூய்மை பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். தாமிரபரணி கரை பகுதியில் உள்ள மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளும் விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வெண்டும். துய்மை பணிகளில் ஈடுபட விரும்பும் பொதுமக்கள், குடியிருப்போர் நலச்சங்கங்கள், தன்னார்வ தொண்டர்கள் Namma NELLAI மொபைல் ஆப் டவுன்லோடு செய்து SBM கிளிக் செய்து Volunteer For A Cause கிளிக் செய்து பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் விபரங்களுக்கு அண்ணா பல்கலைக்கழக பிரதிநிதிகள் திரு.நல்லபெருமாள் செல்.9994604544, செல்வி பொன்சித்தரா செல்.9566622724 தொடர்பு கொள்ளவும். இப்பணிகளை அனைவரும் ஒருங்கிணைந்து சிறப்பாக மேற்கொள்ள வேண்டும்.என பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, அண்ணா பல்கலைக்கழக முதல்வர் முனைவர் சத்யநாதன், உதவி இயக்குநர் பேரூராட்சிகள் திரு.மாஹின் அபுபக்கர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.கணேஷ்குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி மற்றும் அலுவலர்கள், கல்லூரிகளின் முதல்வர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.